# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 56/மா/2026
நாள்: 17.07.2026

தி. தர்மலிங்கம்
சென்னை–600 043 --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
தாம்பரம் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை, பல்லாவரம், ஜி.எஸ்.டி சாலை, கதவு எண் A-6, 5D, ஒலிம்பியா கிராண்டே அடுக்குமாடி குடியிருப்பு என்கிற முகவரியில் வசிக்கும் திரு. தி.தர்மலிங்கம் என்பவரின் 27.02.2026 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.03.2026 அன்று பெறப்பட்டு 56/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, பல்லாவரம், ஜி.எஸ்.டி சாலை, கதவு எண் A-6, 5D, ஒலிம்பியா கிராண்டே அடுக்குமாடி குடியிருப்பு என்கிற முகவரியில் வசிக்கும் திரு. தி.தர்மலிங்கம் என்பவர் தனது 27.02.2026 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

“நான் டி. தர்மலிங்கம், மேலே குறிப்பிட்ட முகவரியில் வசிக்கும் குடியிருப்பாளர் ஆவேன். எங்கள் குடியிருப்பில் 700–க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. குடிநீர் இணைப்பிற்கான முழு வைப்பு தொகை (Water Connection Deposit) ஏற்கனவே மாநகராட்சியால் பெறப்பட்டுள்ளது.

மாநகராட்சியின் மாறுபட்ட நிலைபாடுகள்:

முதலில் 8 இணைப்புகள் மட்டுமே வழங்க முடியும் என தெரிவித்தனர். தற்போது Bulk இணைப்பு வழங்க தயாராக உள்ளதாக கூறி, அனைத்து வீடுகளும் முழுமையாக சொத்து வரி செலுத்தியிருக்க வேண்டும் என புதிய நிபந்தனை விதித்துள்ளனர்.

இந்நிபந்தனை வைப்புத்தொகை பெறும்போது அறிவிக்கப்படவில்லை. மேலும், சில வீடுகளில் சொத்துவரி நிலுவை இருந்தால்:

மாநகராட்சிக்கு சொத்துவரி மதிப்பீடு செய்யும் அதிகாரம் உள்ளது. நிலுவை தொகையை வசூலிக்கும் அதிகாரமும் உள்ளது. தேவையானால் சட்டப்படி Recovery Proceedings மேற்கொள்ளும் அதிகாரமும் உள்ளது. அதாவது, சொத்துவரி வசூலிக்க சட்ட ரீதியான முழு அதிகாரமும் மாநகராட்சிக்கு உள்ளது. எனவே, வரி நிலுவை உள்ள சில வீடுகளை காரணம் காட்டி

700–க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு குடிநீர் இணைப்பை மறுப்பது சட்டபூர்வமானதும் நியாயமானதும் அல்ல.

சட்ட ஆதாரங்கள்

Article 21 – Right to Life:

குடிநீர் என்பது வாழ்வதற்கான அடிப்படை உரிமை 9 ஆண்டுகளாக இணைப்பு மறுப்பு அடிப்படை உரிமை மீறலாகும்.

Article 14 – Equality:

ஒரு சில வீடுகளின் பிரச்சினையை காரணம் காட்டி முழு குடியிருப்பையும் பாதிப்பது சமத்துவக் கொள்கைக்கு எதிரானது.

Legitimate Expectation:

வைப்புத்தொகை பெற்றபின் இணைப்பு வழங்கப்படும் என்ற நியாயமான எதிர்பார்ப்பை மீறியுள்ளது.

Proportionality Principle:

வரி நிலுவை இருப்பின் அதனை தனித்தனியாக வசூலிக்கலாம். ஆனால் அடிப்படை வசதியை முழுமையாக மறுப்பது அளவுக்கு மீறிய நடவடிக்கை.

Maladministration:

ஒவ்வொரு கட்டத்திலும் மாறுபட்ட காரணம் கூறி நீண்ட கால தாமதம் செய்வது தவறான நிர்வாகமாகும்.

எனவே, மாண்புமிகு ஓம்புட்ஸ்மன் அவர்களிடம் பணிவன்புடன் கோருவது:
மாநகராட்சியின் தன்னிச்சையான மற்றும் மாறுபட்ட நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும்.

சொத்துவரி வசூலிக்க தனி சட்ட நடைமுறைஉள்ள நிலையில், அதனை Bulk Water Connection–க்கு முன் நிபந்தனையாக விதிப்பது தவறு என அறிவிக்க வேண்டும்.

Olympia Grande Apartment குடியிருப்பிற்கு உடனடியாக மொத்த (Bulk) குடிநீர் இணைப்பு வழங்க காலவரையறையுடன் உத்தரவிட வேண்டும். தேவையானால் பொறுப்பு கூற வேண்டிய அதிகாரிகள் மீது நடவடிக்கை பரிந்துரைக்க வேண்டும்.

700–க்கும் மேற்பட்ட குடும்பங்களின் அடிப்படை வாழ்வாதார உரிமையை கருத்தில் கொண்டு அவசர தலையீடு செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 20.03.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.07.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், தாம்பரம் மாநகராட்சி மண்டலம் II-ன் உதவிப் பொறியாளர் தனது 01.07.2026 நாளிட்ட மின்னஞ்சலில் இணைத்தனுப்பியுள்ள உதவி ஆணையாளர் 30.06.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 1515/2026/இ2–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–II-க்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளுக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியம் மூலம் குடிநீர் பெறப்பட்டு பொதுமக்களுக்கு மூன்று நாட்களுக்கு ஒரு முறை மாநகராட்சி குடிநீர் விநியோக அட்டவணையின்படி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. திரு. T. தர்மலிங்கம் அவர்களின் 27.02.2026 நாளிட்ட மனுவில் மண்டலம்–IIக்குட்பட்ட வார்டு எண் 13–ல் அமைந்துள்ள ஒலிம்பியா கிராண்ட் அடுக்குமாடி குடியிருப்பிற்கு புதிய குடிநீர் இணைப்பு வேண்டி மனு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி பொருள் குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.P. 26586 of 2019 and W.M.P. No.26210 of 2019 ஒலிம்பியா அடுக்குமாடி உரிமையாளர் நலச் சங்கம் மூலம் தொடரப்பட்டது. மாண்பமை உயர்நீதிமன்றத்தில் மாநகராட்சிக்கு செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் செலுத்தப்படும் பட்சத்தில் எட்டு இணைப்புகள் வழங்கலாம் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வலுவலக கடிதத்தில், உயர்நீதிமன்ற உத்திரவின்படி குடிநீர் இணைப்பு வழங்க குடிநீர் இணைப்புக்கான வைப்புத் தொகை 1 இணைப்பிற்கு ரூ.7500/– வீதம் 744 குடியிருப்புகளுக்கு ரூ.59,78,576/– செலுத்த கோரப்பட்டது. அதன்படி கட்டிட அனுமதியின் போது ரூ.39,40,000/– வைப்புத் தொகை வங்கி வரைவோலை எண் 091599 நாள் 01.10.2012 செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகை செலுத்தப்பட்ட விவரங்கள் கோரி நகரமைப்பு பிரிவிற்கு குறிப்பு பெற அனுப்பப்பட்டது. மேற்படி 744 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம் கட்டிட அனுமதி பதிவேடு 2012, பக்கம் எண் 26, வரிசை எண் 822–ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என நகரமைப்பு பிரிவின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள தொகை பணிகள் முடிக்கப்பட்ட பின் ரூ.20,36,576/– நாள் 10.03.2023 அன்று நகராட்சி வரி வசூல் மையத்தில் வங்கி வரைவோலை எண் 010169 நாள் 07.03.2023–ல் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒலிம்பியா அடுக்குமாடி உரிமையாளர் நலச் சங்கம் குடிநீர் இணைப்பு வழங்க கோரி 07.04.2026 அன்று அளிக்கப்பட்ட கடிதத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ள, வருவாய் பிரிவிற்கு சொத்துவரி விதிக்கப்பட்ட விவரங்கள் கோரி குறிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி வருவாய் பிரிவில் ஒலிம்பியா அடுக்குமாடி குடியிருப்பில் 744 குடியிருப்புகளில், 613 குடியிருப்புகளுக்கு மட்டுமே சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது எனவும், மீதமுள்ள 131 குடியிருப்புகளுக்கு சொத்துவரி விதிக்கப்படவில்லையென குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வரப்பெற்ற வருவாய் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவின் குறிப்பின்படி ஒலிம்பியா அடுக்குமாடி குடியிருப்பில் தற்போதுவரை 131 குடியிருப்புகளுக்கு சொத்துவரி விதிக்கப்படவில்லை. மேலும் குடிநீர் வைப்புதொகை செலுத்தப்பட்ட ரூ.39,40,000/–க்கான அசல் பில் பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்நிலையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி ஒலிம்பியா அடுக்குமாடி குடியிருப்பிற்கு எட்டு இணைப்புகள் வழங்கும் பொருட்டு 25.05.2026 அன்று மாநகராட்சி பணியாளர்கள் மூலம் இணைப்பு வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது அச்சமயம் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் ஒன்று திரண்டு தங்கள் பகுதியில் குடிநீர் பற்றக்குறை உள்ளதால் அடுக்குமாடி வீட்டிற்கு குடிநீர் இணைப்பு

வழங்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவித்ததுடன் சாலை மறியலில் ஈடுபட போவதாக தெரிவித்து பணி தடுத்து நிறுத்தப்பட்டது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மண்டலம்–IIக்குட்பட்ட ரேடியல் சாலையில் அமைக்கப்பட்டுள்ள உயர்அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தின் கீழ் தனியாக குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கப்பட்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. கூடுதலாக குடிநீர் பெறப்படும் பட்சத்தில் குடிநீர் இணைப்பு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

5. மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''எங்கள் குடியிருப்பில் 700–க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. குடிநீர் இணைப்பிற்கான முழு வைப்பு தொகை (Water Connection Deposit) ஏற்கனவே தாம்பரம் மாநகராட்சியால் பெறப்பட்டுள்ளது. முதலில் 8 இணைப்புகள் மட்டுமே வழங்க இயலும் என தெரிவித்து தற்போது Bulk இணைப்பு வழங்க தயாராக உள்ளதாக கூறி, அனைத்து வீடுகளும் முழுமையாக சொத்து வரி செலுத்தியிருக்க வேண்டும் என புதிய நிபந்தனை விதித்துள்ளனர்.

வைப்புத்தொகை பெறும்போது இந்நிபந்தனை அறிவிக்கப்படவில்லை. சில வீடுகளில் சொத்துவரி நிலுவையில் உள்ளதால் தாம்பரம் மாநகராட்சிக்கு சொத்துவரி மதிப்பீடு செய்யவும் மற்றும் நிலுவை தொகையை வசூலிக்கும் அதிகாரம் உள்ளது. தேவைப்பட்டால் Recovery Proceedings மேற்கொள்ளும் அதிகாரம் உள்ளது. எனவே, வரி நிலுவை உள்ள சில வீடுகளை காரணம் காட்டி 700 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு குடிநீர் இணைப்பை மறுப்பது சட்ட பூர்வ நியாயமானது அல்ல.

மேலும் இது குறித்து தாம்பரம் மாநகராட்சியை அணுகும்போது சரியான பதில் அளிக்கவில்லை. ஒவ்வொரு முறையும் ஒரு காரணம் கூறி கடந்த 3 வருடங்களாக எங்கள் சங்கத்தின் நிர்வாகிகளை அலைகழித்து வருகிறார்கள்.

குடிநீர் என்பது வாழ்வாதாரத்திற்கு அடிப்படை தேவையாகும். எங்கள் குடியிருப்பில் நல்ல குடிநீர் வசதி இல்லாததால் குடியிருப்புவாசிகள் பல நோய்களுக்கு ஆட்பட்டு அவதிப்பட்டு வருகிறார்கள். மேலும் மருத்துவத்திற்காக அதிக பணம் செலவிட வேண்டிய சூழ்நிலையில் உள்ளார்கள்.

எனவே, மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் 23.03.2022 நாளிட்ட தீர்ப்பில் ஆணையிட்டவாறு எங்கள் குடியிருப்பிற்கு உடனடியாக 8 குடிநீர் இணைப்புகளை வழங்கவும், எங்கள் அடுக்கு மாடி குடியிருப்பில் உள்ள எல்லா வீடுகளுக்கும் குறிப்பிட்ட காலஅவகாசம் நிர்ணயித்து Bulk குடிநீர் இணைப்புகள் வழங்க தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி உதவிப் பொறியாளர் 03.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''திரு.தி.தர்மலிங்கம் அவர்களின் புகார் மனுவில் மண்டலம்–2க்குட்பட்ட வார்டு எண்.13–ல் அமைந்துள்ள ஒலிம்பியா கிராண்ட் அடுக்குமாடி குடியிருப்பிற்கு புதிய குடிநீர் இணைப்பு வேண்டி மனு அளிக்கப்பட்டது.

மேலும் மேற்படி பொருள் குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P No.26586 of 2019 and W.M.P.No.26210 of 2019 ஒலிம்பியா அடுக்குமாடி உரிமையாளர் நலச்சங்கம் மூலம் தொடரப்பட்டது. மாண்பமை உயர்நீதிமன்றத்தில் மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் செலுத்தப்படும் பட்சத்தில் எட்டு இணைப்புகள் வழங்கலாம் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் உயர்நீதிமன்ற உத்தரவின்படி குடிநீர் இணைப்பு வழங்க குடிநீர் இணைப்புக்கான வைப்புத் தொகை ஒரு இணைப்பிற்கு ரூ.7500/– வீதம் 744 குடியிருப்புகளுக்கு ரூ.59,78,578/– செலுத்த கோரப்பட்டது. அதன்படி கட்டிட அனுமதியின் போது ரூ.39,40,000/– வைப்புத்தொகை வங்கி வரைவோலை எண்.091599 நாள் 01.10.2012 அன்று செலுத்தப்பட்டது. மீதமுள்ள தொகை பணிகள் முடிக்கப்பட்டபின் ரூ.20,38,576/– நாள் 10.03.2023 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒலிம்பியா அடுக்குமாடி உரிமையாளர் நலச்சங்கம் குடிநீர் இணைப்பு வழங்க கோரி 07.04.2026 அன்று அளிக்கப்பட்ட கடிதத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வருவாய் பிரிவிற்கு சொத்துவரி விதிக்கப்பட்ட விவரங்கள் கோரி குறிப்பு அனுப்பப்பட்டது. அதன்படி ஒலிம்பியா அடுக்குமாடி குடியிருப்பில் 744 குடியிருப்புகளில், 613 குடியிருப்புகளுக்கு மட்டுமே சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது எனவும், மீதமுள்ள 131 குடியிருப்புகளுக்கு சொத்துவரி விதிக்கப்படவில்லை என தெரிய வந்தது.

இந்நிலையில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின்படி ஒலிம்பியா அடுக்குமாடி குடியிருப்பிற்கு எட்டு இணைப்புகள் வழங்கும் பொருட்டு 25.05.2026 அன்று மாநகராட்சி பணியாளர்கள் மூலம் இணைப்பு வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் ஒன்று திரண்டு தங்கள் பகுதியில் குடிநீர் பற்றாக்குறை உள்ளதால் அடுக்குமாடி குடியிருப்பிற்கு குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது என எதிர்ப்பு தெரிவித்ததுடன் சாலை மறியலில் ஈடுபட போவதாக தெரிவித்ததால் பணி தடுத்து நிறுத்தப்பட்டது.

மேலும் தமிழ்நாடு அரசின் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தில் 10 MLD கோரப்பட்டுள்ள நிலையிலும், மெட்ரோ குடிநீர் திட்டத்தில் குடிநீர் வழங்க வாய்ப்பு உள்ள சூழ்நிலையில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் 23.03.2022 நாளிட்ட தீர்ப்பில் ஆணையிட்டவாறு மேற்கண்ட அடுக்கு மாடி குடியிருப்பிற்கு எட்டு இணைப்புகள் 15 தினங்களுக்குள் வழங்க தாம்பரம் மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7 முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி மண்டலம் II–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–II-க்குட்பட்ட வார்டு எண்.13–ல் அமைந்துள்ள ஒலிம்பியா கிராண்ட் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் மனுதாரர், தனது அடுக்குமாடி குடியிருப்பில் 700–க்கும் மேற்பட்ட வீடுகளுக்கான குடிநீர் இணைப்பிற்கான முழு வைப்பு தொகை (Water Connection Deposit) ஏற்கனவே தாம்பரம் மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டது என்பதும், முதலில் 8 இணைப்புகள் மட்டுமே வழங்க இயலும் என தெரிவித்து தற்போது Bulk இணைப்பு வழங்க தயாராக உள்ளதாக கூறி, அனைத்து வீடுகளும் முழுமையாக சொத்து வரி செலுத்தியிருக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது என்பதும், வைப்புத்தொகை பெறும்போது இந்நிபந்தனை அறிவிக்கப்படவில்லை என்பதும், சில வீடுகளில் சொத்துவரி நிலுவையில் உள்ளதால் தாம்பரம் மாநகராட்சிக்கு சொத்துவரி மதிப்பீடு செய்யவும் மற்றும் நிலுவை

தொகையை வசூலிக்கும் அதிகாரமும், தேவைப்பட்டால் Recovery Proceedings மேற்கொள்ளும் அதிகாரமும் உள்ளது என்பதும், எனவே, வரி நிலுவை உள்ள சில வீடுகளைக் காரணம் காட்டி 700 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்க மறுக்கப்படுவது நியாயம் இல்லை என்பதும், இது குறித்து தாம்பரம் மாநகராட்சியை அணுகும்போது சரியான பதில் அளிக்காமல், ஒவ்வொரு முறையும் ஒரு காரணம் கூறி கடந்த 3 வருடங்களாக தங்கள் சங்கத்தின் நிர்வாகிகளை அலைகழிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதும், குடிநீர் என்பது வாழ்வாதாரத்திற்கு அடிப்படை தேவை என்பதால், மனுதாரரின் குடியிருப்பில் நல்ல குடிநீர் வசதி இல்லாததால் குடியிருப்புவாசிகள் பல நோய்களுக்கு ஆட்பட்டு அவதிப்பட்டு, மருத்துவத்திற்காக அதிக பணம் செலவிட வேண்டிய சூழ்நிலையில் உள்ளார்கள் என்பதும், மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் 23.03.2022 நாளிட்ட தீர்ப்பில் ஆணையிட்டவாறு மனுதாரர் அடுக்குமாடி குடியிருப்பிற்கு உடனடியாக 8 குடிநீர் இணைப்புகளை வழங்கவும் மற்றும் அக்குடியிருப்பில் உள்ள எல்லா வீடுகளுக்கும் குறிப்பிட்ட காலஅவகாசம் நிர்ணயித்து Bulk குடிநீர் இணைப்புகள் வழங்க தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

திரு.தி.தர்மலிங்கம் என்பவரின் புகார் மனுவில் மண்டலம்–II–க்குட்பட்ட வார்டு எண்13–ல் அமைந்துள்ள ஒலிம்பியா கிராண்ட் அடுக்குமாடி குடியிருப்பிற்கு புதிய குடிநீர் இணைப்பு கோரி அளிக்கப்பட்ட மனு குறித்து, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P No.26586 of 2019 and W.M.P.No.26210 of 2019 ஒலிம்பியா அடுக்குமாடி உரிமையாளர் நலச்சங்கம் மூலம் தொடரப்பட்ட வழக்கில், மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் செலுத்தப்படும் பட்சத்தில் எட்டு இணைப்புகள் வழங்கலாம் என மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதும், அவ்வுத்திரவின்படி, மேற்கண்ட மனுதாரரின் குடியிருப்பிற்கு குடிநீர் இணைப்பு வழங்க குடிநீர் இணைப்புக்கான வைப்புத் தொகை ஒரு இணைப்பிற்கு ரூ.7500/– வீதம் 744 குடியிருப்புகளுக்கு ரூ.59,78,578/– தாம்பரம் மாநகராட்சிக்கு செலுத்த கோரப்பட்டு, கட்டிட அனுமதியின் போது ரூ.39,40,000/– வைப்புத்தொகை வங்கி வரைவோலை எண்.091599 நாள் 01.10.2012 அன்று செலுத்தப்பட்டது போக, மீதமுள்ள தொகை பணிகள் முடிக்கப்பட்டபின் ரூ.20,38,576/– நாள் 10.03.2023 அன்று செலுத்தப்பட்டுள்ளது என்பதும், ஒலிம்பியா அடுக்குமாடி உரிமையாளர் நலச்சங்கம் குடிநீர் இணைப்பு வழங்க கோரி அளிக்கப்பட்ட கடிதத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதும், மேற்கண்ட குடியிருப்பிற்கான சொத்துவரி விதிக்கப்பட்ட விவரங்களை வருவாய் துறையின் பிரிவிடம் கோரியதற்கு, ஒலிம்பியா அடுக்குமாடி குடியிருப்பில் 744 குடியிருப்புகளில், 613 குடியிருப்புகளுக்கு மட்டுமே சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது எனவும், மீதமுள்ள 131 குடியிருப்புகளுக்கு சொத்துவரி விதிக்கப்படவில்லை என தெரிய வந்தது என்பதும், இந்நிலையில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின்படி ஒலிம்பியா அடுக்குமாடி குடியிருப்பிற்கு எட்டு இணைப்புகள் வழங்கும் பொருட்டு 25.05.2026 அன்று மாநகராட்சி பணியாளர்கள் மூலம் இணைப்பு வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் ஒன்று திரண்டு தங்கள் பகுதியில் குடிநீர் பற்றாக்குறை உள்ளதால் அடுக்குமாடி குடியிருப்பிற்கு குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது என எதிர்ப்பு தெரிவித்ததுடன் சாலை மறியலில் ஈடுபட போவதாக தெரிவித்ததால் பணி தடுத்து நிறுத்தப்பட்டது என்பதும், தமிழ்நாடு அரசின் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தில் 10 MLD கோரப்பட்டுள்ள நிலையிலும், மெட்ரோ குடிநீர் திட்டத்தில் குடிநீர் வழங்க வாய்ப்பு உள்ள சூழ்நிலையில். மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் 23.03.2022 நாளிட்ட தீர்ப்பில் ஆணையிட்டவாறு மேற்கண்ட அடுக்கு மாடி குடியிருப்பிற்கு எட்டு இணைப்புகள் 15 தினங்களுக்குள் வழங்க தாம்பரம் மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி மண்டலம் II–ன் உதவி

ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், திரு. தி.தர்மலிங்கம் என்பவரின் புகார் மனுவில் மண்டலம்–II–க்குட்பட்ட வார்டு எண்13–ல் அமைந்துள்ள ஒலிம்பியா கிராண்ட் அடுக்குமாடி குடியிருப்பிற்கு புதிய குடிநீர் இணைப்பு கோரி அளிக்கப்பட்ட மனு குறித்து, தமிழ்நாடு அரசின் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தில் 10 MLD கோரப்பட்டுள்ள நிலையிலும், மெட்ரோ குடிநீர் திட்டத்தில் குடிநீர் வழங்க வாய்ப்பு உள்ள சூழ்நிலையில், மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் நீதிப் பேராணை மனு எண். **26586/2019** மற்றும் W.M.P.No.26210/2019–ல் **23.03.2022**–ல் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்பிற்கு குடிநீருக்கான இணைப்புகளை 15 தினங்களுக்குள் வழங்க தாம்பரம் மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தாம்பரம் மாநகராட்சி உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மாண்புமிகு உயர்நீதிமன்ற ஆணையினை நிறைவேற்றும் வகையில் உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளுமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

**2026**–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் **17**–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. தி. தர்மலிங்கம்,
A-6, 5D, ஒலிம்பியா கிராண்டே
அடுக்குமாடி குடியிருப்பு,
ஜி.எஸ்.டி. சாலை, பல்லாவரம், சென்னை–**600 043.**

(2) ஆணையாளர், தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–**600 045.**

(3) உதவி ஆணையாளர் (பொ),
மண்டலம்–II,தாம்பரம் மாநகராட்சி, சென்னை–**600 044.**

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை **600 028.**

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை **600 028.**

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை–600 032

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

21/7/26
செயலாளர்.